1989 மே 5]

ஆனால் அதிலே 80,000, 90,000 மக்கள் தொகை இருக்கும். சில ஒன்றியங்களில் 30, 40, 50 ஊராட்சி மன்றங்கள் கூட இருக்கும். ஆனால் மக்கள் தொகை மொத்தத்தில் 1 லட்சத்திற்கு உட்பட்டுத்தான் இருக்கும். அந்த முறையிலே 1961-லே பிரிக்கப்பட்டது. அதிலே ஏரியா பெரிதாக இருக்கிறது, ஊராட்சி மன்றங்களும் அதிக அளவில் இருக்கிறது என்பதற்காக ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து, தனி ஒன்றியம் அமைக்க இயலாது.

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஜனத்தொகை அதிகமாகக் கொண்ட ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்து, இரண்டு ஒன்றியங்களாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

செட்டிப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டம்.

220—(*வினா எண். 549) திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, செட்டிப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவுபெறும்?

(இ) இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் நிலப்பரப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்கான திட்ட அறிக்கை (பிராஜக்ட் ரிப்போர்ட்) இந்த ஆண்டு இறுதிக்குள் அரசுக்கு வரும். அந்த அறிக்கை வந்த பிறகு, அரசு அது குறித்து முடிவெடுக்கும்.

(இ) 1,785 ஏக்கர்.

திரு. பி. மாரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பகுதியிலே 1,700 சொச்சம் ஏக்கர்கள் நீர்ப்பாசன வசதி பெறுமென்று அமைச்சரவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் பாசன வசதியில்

வாமல் காய்ந்து கிடக்கின்றன. அந்தப் பகுதிகளை பில்—ஆப் பண்ண வேண்டுமென்றால் கோவை மாவட்டத்தினுடைய பார்டர், மதுரை மாவட்டத்தினுடைய பார்டரில் ஆறுகள் ஏராளமாக உற்பத்தியாகி, மேற்கு நோக்கிப் போகின்றன. அந்த ஆறுகள் தமிழக அரசின் ஆளுகைக்குட்பட்டவைகளாகும். அந்தப் பகுதிகளில் தன்னிச்சையாக, வேறு மாநில அரசாங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடததாமல், நம்முடைய அரசுக்கு உட்பட்ட பகுதிகளில் ஏதாவது அணைகள் கட்டி, அந்தப் பகுதிகள் பாசன வசதி பெறுவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்குமா...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே கொஞ்சம் மூச்சு வாங்கிக்கொள்ளுங்கள். (சிரிப்பு).

திரு. பி. மாரப்பன் : அடுத்த கேள்விக்கு நீங்கள் விடமாட்டீர்கள். அதனால் தொடர்ந்து முடித்துவிடுகிறேன். முயற்சி எடுப்போம், அரசின் பரிசீலனையில் உள்ளது என்று பார்மாலிட்டிக்காகச் சொல்லக்கூடாது. இந்தச் சமுதாயததிற்கு சேவை செய்ய ஜனங்கள் அனுப்பியிருக்கிறார்கள், நம்முடைய ஆட்சிக் காலத்தில் ஏதாவது செய்ய வேண்டுமென்ற அடிப்படை உணர்வோடு அவசரம் அவசரமாக, உடனடியாக இவற்றைச் செய்து முடிக்க ஏதாவது திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குத தனியாக சோடா ஏதாவது வேண்டுமா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செட்டிப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். செட்டிப்பாளையம் நீர்த்தேக்கத்தை எங்கே கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கருதுகிறாரோ, அதே ஓடையில் அந்தத் திட்ட ஸ்தலத்திற்குக் கீழே இன்னொரு நீர்த் தேக்கம் இருக்கிறது. வட்டமலைக் கரை ஓடை நீர்த்தேக்கம் என்று அதற்குப் பெயர்.

அந்த நீர்த்தேக்கம் 1979-ஆம் ஆண்டு முதல் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த நீர்த் தேக்கத்திற்கே போதிய அளவு தண்ணீர் வரவில்லை. வட்டமலைக்கரையோடை நீர்த்தேக்கத்தின் மூலம் 2,960 ஏக்கர் பாசனம் பெற வேண்டும். ஆனால் நீர் இல்லாத காரணத்தால், 1,700 ஏக்கர்தான் தற்போது பாசனம் பெறுகிறது. எனவே ஏற்கெனவே இருக்கிற ஒரு நீர்த் தேக்கத்திற்கே போதிய அளவு நீர் இல்லாத நிலையில், அந்த நீர்த் தேக்கத்திற்கு மேலே இன்னொரு நீர்த்தேக்கத்தைக் கட்ட முடியாது என்பதுதான் அரசினுடைய முடிவு.

1989 மே 5]

இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரப்பன் போன்று மற்றும் பலரும் அடிக்கடி விண்ணப்பம் கொடுக்கிற காரணத்தால், அரசு அது குறித்து ஒரு முடிவு எடுத்தது. அதாவது வட்டமலைக்கரை ஓடையின் நடைமுறை விவரங்கள், நீர் வரத்து, உபரி நீர்ப்போக்கு, பயன்பெற்றுள்ள பாசனப் பரப்பு, பரம்பிக்குளம்—ஆளியாறு பகுதியிலிருந்து வருகிற கசிவு நீர் அளவு ஆகியவைகளையெல்லாம் ஐந்து ஆண்டுக் காலத்திற்குக் கணக்கெடுத்து, அதன் மூலமாக இன்னொரு நீர்த் தேக்கத் திட்டம் கட்டுவதற்கான சாத்தியக்கூறு உண்டா என்று ஆராயலாம் என்று அரசு முடிவெடுத்தது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரப்பன் அவர்களுடைய அவசரத்தை முன்னிட்டு, ஐந்து ஆண்டுக் காலக்கெடு என்பதற்குப் பதிலாக மூன்று ஆண்டுக்காலத்தின் கணக்கையெடுத்து, அதன் அடிப்படையில் ஒரு முடிவெடுக்கலாம் என்று அரசு இப்போது முன்வந்திருக்கிறது. அதன் அடிப்படையின் இந்த ஆண்டு—அதாவது 1989-ம் ஆண்டு இறுதியில்—அரசுக்கு மூன்று ஆண்டுக் காலத்தின் அடிப்படையின் ஆய்வு அறிக்கை கிடைக்கும். அதற்குப் பிறகு, அடுத்த நீர்த்தேக்கத்தைக் கட்டுவதா அல்லது வேண்டாமா என்பதை அரசு முடிவு செய்யும். அதுவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொருத்தருள்க.

கால்வாய்கள் சீரமைத்தல்

221—(*வினா எண் 562)—திரு. கே. சுப்பிரமணியபிள்ளை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் இருக்கும் தோவாளைச் சானல், புத்தனாறு கால்வாய்கள் சீரமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது சீரமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சீரமைக்கும் பணிகள் தலைமைப் பொறியாளர், தேசிய நீர் மேலாண்மை அவர்களின் திட்டப்படி எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. சுப்பிரமணியபிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மக்களின் நீண்ட நாளைய—முக்கிய கோரிக்கையான கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முக்கியமாகப் பேச்சுப்பாறை—பெருஞ்சாணி அணையிலிருந்து புறப்பட்டு, நீளம் கூடிய தோவாளை—புத்தனாறு